# In the Court of the Principal District Munsif, Padmanabhapuram.

O.S.No. 29/2021 தேதி- 07.08.2025
(P.W.1) - ராஜேந்திரன்

குறுக்கு விசாரணை தொடர்ச்சி

1. இந்த வழக்கில் உள்ள பிரதிவாதியின் மீது புனித அந்தோணியார் தேவாலயம் கருங்கல் பங்கு பேரவைக்கு எதிராக ஒரு வழக்கு எண்.25/2020 என்ற வழக்கை தாக்கல் செய்துள்ளார் என்றால் சரிதான். மேற்சொன்ன வழக்கு இதே நீதிமன்றத்தில் தான் நிலுவையில் உள்ளது என்றால் சரிதான். மேற்சொன்ன வழக்கில் நான் தாக்கல் செய்த எதிர்கோரிக்கை மனு தாக்கல் செய்துள்ளோம் என்றால் தாக்கல் செய்துள்ளோம். மேற்சொன்ன எதிர்கோரிக்கை மனுவில் என்ன பரிகாரம் கேட்டு தாக்கல் செய்துள்ளோம் என்றால் வீடு நஷ்ட ஈடு கேட்டு தாக்கல் செய்துள்ளோம். மேற்சொன்ன எதிர்க்கோரிக்கை மனுவில் சொல்லப்பட்டுள்ள சொத்து விவரம் மட்டுபாவு கடை கட்டிடம் 140 சதுர அடி என்று குறிப்பிட்டுள்ளது என்றால் 260 சதுர அடி ஆகும். என்னுடைய எதிர்க்கோரிக்கை மனுவில் சொல்லப்பட்டுள்ளது சரியா அல்லது தவறா என்றால் தவறு. இவ்வழக்கில் சொல்லப்பட்டுள்ள சொத்தின் விஸ்திரனம் என்ன என்றால் 260 சதுர அடி ஆகும். வழக்கு சொத்தின் வடக்கு பக்கம் ஆசாரி சொத்து உள்ளது என்றால் சரிதான். வழக்கு சொத்தின் தெற்கு பக்கம் மரியமைக்கேல் சொத்து மற்றும் பாதை உள்ளது என்றால் சரிதான். வழக்கு சொத்தின் மேற்கு பக்கம் கருங்கல் திங்கள் சந்தை ரோடு உள்ளது என்றால் சரிதான். பட்டிகை சொத்தின் விஸ்திரனம் மற்றும் எல்கைகள் பற்றி எனக்கு தெரியாது என்றாலும் கற்பனையாக சொடிக்கப்பட்டு தாக்கல் செய்யப்பட்ட வழக்கு என்றால் சரியல்ல.

2. வழக்கு சொத்தில் உரிமை உள்ளதற்கானஆவணங்களை நான் பார்த்துள்ளேனா என்றால் தேவாலயத்தில் உள்ளது. வழக்கு பட்டிகை சொத்து பற்றிய ஆவணங்களை ஏதாவது தாக்கல் செய்ய முடியுமா என்றால் தாக்கல் செய்ய முடியும். வழக்கு பட்டிகை கட்டிடம் கருங்கல் மற்றும் செங்களால் ஏற்படுத்தப்பட்டது என்றால் சரிதான். வழக்கு பட்டிகை கட்டிடம் பாராமரிப்பு வேண்டி தீர்மானம் நிறைவேற்றி பாராமரிப்பு செலவு ஏதும் செய்யப்படவில்லை என்றால் சரிதான். பிரதிவாதி வழக்கு பட்டிகை கலை கட்டிடத்தை 30 ஆண்டுகள் பராமரித்து பல லட்சம் செலவு செய்துள்ளார் என்றால் சரியல்ல. 2016 முதல் 2019 வரையில் 1 லட்சத்தி 50 ஆயிரம் ரூபாய் கட்டிடத்தின் பராமரிப்புகாக செலவு செய்துள்ளார் என்றால் சரியல்ல. கருங்கல் பேருந்து நிலையத்திற்கு பக்கத்தில் பங்கு

பேரவைக்கு உரிமைப்பட்ட கிளை கட்டிடங்கள் வாடகைக்குவிடப்பட்டுள்ளது என்றால் சரிதான். கருங்கல் பேருந்து நிலையத்தில் இருந்து சுமார் 150 அடி தொலைவில் தான் கட்டிடம் அமைந்துள்ளது என்றால் சரிதான். மேற்சொன்ன கட்டிடத்திற்கு கழிவறை வசதி உள்ளதா என்றால் சரிதான். தற்போது மேற்சொன்ன கட்டிடத்தின் வாடகை பணம் ரூ. 8000/- முதல் 12,000/- வரை உள்ளது என்றால் சரிதான்.

(வழக்கறிஞரின் வேண்டுகோளுக்கிணங்க குறுக்கு விசாரணை தொடர்ச்சிகாக வேறு தேதிக்கு ஒத்தி வைக்கப்படுகிறது).